- எல்லா வினாக்களுக்கும் விடை தருக
- 1 தொடக்கம் 5 வரையான வினாக்கள் ஒவ்வொன்றின் கீழும் 1, 2, 3, 4 என்று இலக்கமிடப்பிடப்பட்டிருக்கும் தெரிவுகளில் சரியானது அல்லது மிகப்பொருத்தமான விடையை தெரிவு செய்க

---

1. “தண்டாமரையினுடன் பிறந்தும்” என்பதில் தண் என்பது
   i. குளிர் ii வெப்பம் iii சூடு iv தேன்
2. “அண்ணல் யானை அணிதேர் புரவி” என்பதில் புரவி என்பது
   i. அழகு ii வரிசை iii குதிரை iv பெருமை
3. “அந்தக்கிணற்றின் அடியை காணமுடியாது” என்பதில் அடி என்பதன் எதிர்ப்பதம்
   i. நுனி ii முடி iii மேல் iv சேய்மை
4. “அன்பு கொள்ளல் ஆபத்தானது” என்பதில் இடம்பெறும் அன்பு என்பதன் எதிர்ப்பதம்
   i. வெறுப்பு ii வன்பு iii ஆசை iv நிராசை
5. “இடுக்கண் நீக்குதல் உத்தமநண்பனின் பண்பு” இங்கு இடுக்கண் என்பது
   i. கோபம் ii துன்பம் iii பகை iv வெறுப்பு

பகுதி 2

01. பின்வருவனவற்றுக்கு சுருக்கமான விடை தருக

1. நாவலர் எழுந்தார் என்ற கட்டுரையை எழுதியவர் யார்?
2. நாவலர் அவர்கள் இறைபதம் அடைந்த ஆண்டு யாது?
3. நாவலர் அவர்களால் உருவாக்கப்பட்ட பாடசாலையின் பெயர் என்ன?
4. மாபெரும் கூட்டம் என்று சொல்லப்படும் கூட்டம் எங்கே, எப்போது நடைபெற்றது?
5. அக்கூட்டத்திற்கு பண்டிதமணி அவர்கள் சூட்டிய பெயர் என்ன?
6. சென்னைக் கலாசாலையார் முதன்முதல் நடாத்திய பி.ஏ பரீட்சையில் சித்தியடைந்த யாழ்ப்பாணத்தவர் யாவர்?
7. இலங்கைச் சட்டசபையில் இலங்கைப்பிரதி நிதித்துவத்துக்காக போட்டியிட்ட இருவரது பெயர்களை குறிப்பிடுக?
8. வாதமகா சபைக்கு தலைமை தாங்கியவர் யார்?
9. வாதமகாசபையிலட கலந்துகொண்டவர்கள் யாவர்?
10. அக்காலத்தில் சட்டசபைக்கான பிரதிநிதிகளை எவ்வாறு தெரிவு செய்வார்கள்?

02. பின்வரும் பாடலை, உரைநடையை படித்து அதன் கீழ் தரப்படுகின்ற வினாக்களுக்கு விடை தருக

1. பிறிற்றோ என்பவர் பிரசித்தி பெற்ற பழுத்த வழக்கறிஞர். அக்காலத்துச் சட்ட நிபுணர்களுக்குள்ளே தலைசிறந்தவர். இலங்கையிலுள்ள எல்லோரும் அவரை அறிவர். கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் அவருக்கு பெரிய பேர். பாரிய வழக்குகளுக்கும் அப்பீல்களுக்கும் அவரை நியமிப்பது வழக்கம். அவருக்கு யாழ்ப்பாணத்தில் அளவுகடந்த செல்வாக்கு அந்த நாட்களில் இருந்தது.

i. அப்பீல் என்பதன் பொருள் யாது?
ii. பிறிற்றோ பற்றி கூறப்பட்டவற்றைக் குறிப்பிடுக

03. பின்வருவோர் பற்றி சிறுகுறிப்பு எழுதுக

1. சேர் பொன் இராமநாதன்
2. வை. விஷ்வநாதம்பிள்ளை